# பரீட்சகரின் அறிக்கை

**AA2 பரீட்சை – 2019 யூலை**

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

இவ்வினாப்பத்திரம் A, B, C, D எனும் 4 பகுதிகளில் 10 கட்டாய வினாக்களைக் கொண்டிருக்கிறது.

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01**

வினா இல. 1 ஆனது பத்து (10) கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வீதம் மொத்தமாக 20 புள்ளிகள் இவ்வினாவுக்குரியதாகும்.

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு, மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். இந்த முறை அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றி விடையளித்திருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஒரு சிலர் மாத்திரம் அறிவுறுத்தல்களில் கவனம் செலுத்தாது விடையளித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. ஒரு சிலர் விடைப் புத்தகத்தில் விடை இலக்கத்தை எழுதுவதற்குப் பதிலாக தெரிவுசெய்த விடையினை எழுதியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இல. **1.4** இற்கு சரியான விடையினை அளித்திருக்கவில்லை. இதனூடாக பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் நிறுவனக் கலாசாரம் பற்றிய விளக்கம் காணப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியானதா அல்லது தவறானதா என்பதைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றி விடை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சரியானது'' அல்லது ''தவறானது'' என எழுதுவதற்குப் பதிலாக (✓), (X) எனும் குறியீடுகளைப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### பகுதி B

இந்தப் பகுதி ஒவ்வொரு வினாவுக்கும் 5 புள்ளிகள் வீதம் மொத்தமாக 25 புள்ளிகளுக்காக ஐந்து வினாக்களைக் கொண்டிருந்தது.

**வினா இல. 02**

நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தின் அரிதான வளங்களை விளைதிறன்மிக்க வகையில் பயன்படுத்துவதற்கு பொறுப்பானவர்கள் முகாமையாளர்கள் ஆவர். முகாமையாளர்களை நிறுவனத்தின் மட்டத்திற்கு ஏற்ப வரிசையொன்றில் ஒழுங்குபடுத்த முடியும். அதற்கிணங்க முகாமையாளர்களின் மூன்று மட்டங்களை அடையாளங் காண முடியும். வினாவானது முகாமையாளர்களின் 3 மட்டங்களையும் ஒவ்வொரு மட்டத்திற்கும் ஒவ்வொரு உதாரணம் தந்து விபரிக்குமாறு கேட்டிருந்தது.

பொதுவாகக் கருத்திற் கொள்ளும்போது, பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை வழங்கியிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் முகாமையாளர்களின் 3 மட்டங்களையும் விபரிக்காது வெறுமனே குறிப்பிட்டிருந்ததுடன் உதாரணங்களையும் வழங்கியிருக்கவில்லை. அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஒட்டுமொத்தத்தில் திருப்திகரமான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 03

இவ்வினா அதிகாரவியல் பற்றி வினவப்பட்ட 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** ஆனது அதிகாரவியலின் 3 பண்பியல்புகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்ததுடன் **பகுதி (b)** ஆனது அதிகாரவியலில் எதிர்நோக்கப்படுகின்ற 2 சவால்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. இங்கு பரீட்சார்த்திகள் அதிகாரவியல் பற்றிய போதியளவு அறிவினைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

மொத்தத்தில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே இந்த 2 பகுதிகளுக்கும் விடை எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.**

## வினா இல. 04

இவ்வினா திட்டமிடல் செயன்முறையின் முதலாவது படிமுறையாக நிறுவனமொன்றுக்கு சூழல் ஆய்வினை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

மொத்தத்தில், இதற்கு அளிக்கப்பட்ட விடைகள் சராசரி மட்டத்திலேயே காணப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் PEST பகுப்பாய்வு மற்றும் SWOT பகுப்பாய்வு ஆகியவற்றைக் குறிப்பிட்டிருந்த போதிலும் அவை திட்டமிடல் செயன்முறைக்கு எவ்வாறு முக்கியமானதாக இருக்கிறது என்பது பற்றி விபரித்திருக்கவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் திட்டமிடல் செயன்முறையின் படிமுறைகளைக் குறிப்பிட்டிருந்தனர். நிறுவனத்திற்கு சூழல் ஆய்வு எவ்வாறு முக்கியமானது என்பதைக் குறிப்பிடுவது அவசியமானதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வகையில் விடயங்களை முன்வைத்திருக்கவில்லை. மிகச் சில பரீட்சார்த்திகள் திருப்திகரமான முறையில் விடயங்களை முன்வைத்து இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

இவ்வினா முகாமையாளர் ஒருவருக்கு தீர்மானமெடுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான 3 காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளிக்காததில் இருந்து வினாவை விளங்கிக் கொள்வதில் எழுந்திருக்கக்கூடிய பல்வேறு கஸ்டங்கள் பற்றித் தீர்மானிக்க முடியும். சரியான தீர்மானங்களைக் குறிப்பிடுவதன் மூலம் நிறுவனமொன்றுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை இவ்விடையினூடாக விபரமாக விபரிப்பது சாத்தியமானதாக இருந்தது.

குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் ஒரு முகாமையாளர் யார் என்பதை விபரித்திருந்தனர். இதனால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் போதியளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 06

மாற்ற முகாமைத்துவம் என்பது நிறுவனத்தின் கண்ணோட்டத்திலும் தனிநபர் மட்டங்களிலும் இருந்து மாற்றத்தைக் கையாள்வதற்கான ஒரு முறையான அணுகுமுறை ஆகும். மாற்றத்தின் தன்மையை பல்வேறு வழிகளில் வகைப்படுத்த முடியும். அதற்கிணங்க மாற்றத்தின் 2 வகைகளை விபரிக்குமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை என்பதுடன் அவர்களில் சிலர் அதனைத் தவிர்த்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. விடையளித்திருந்தவர்கள்கூட வினாவுக்குச் சம்பந்தமற்ற விடயங்களை எழுதியிருந்த காரணத்தால் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். பரீட்சைக்குச் சரியானவாறு தயாராக இருந்திருப்பின் இதற்குரிய புள்ளிகளை இலகுவாகப் பெறுவதற்கான சாத்தியம் காணப்பட்டிருந்தது. பாடப் புத்தகத்தினை இவர்கள் சரியானவாறு பயன்படுத்தியிருக்கவில்லை என்பது பட்டவர்த்தனமாகத் தெளிவாகத் தெரிகிறது. மிகச் சிறியளவான பரீட்சார்த்திகளே போதுமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மாற்றத்துடன் தொடர்புடைய வேறுபட்ட யோசனைகள் மற்றும் உதாரணங்கள் விடையாக வழங்கப்பட்டிருந்தன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.**

## பகுதி C

இப்பகுதியில் ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மொத்தம் 30 புள்ளிகளுக்கான 03 வினாக்கள் அடங்கியுள்ளன. இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

### வினா இல. 07

இப்பகுதி முகாமைத்துவத்திற்கான நடத்தைசார் அணுகுமுறை மற்றும் அளவுசார் அணுகுமுறை ஆகியவற்றுடன் தொடர்புடையதான இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** இல் நடத்தைசார் அணுகுமுறையின் 5 விமர்சனங்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டிருந்த அதே வேளை **பகுதி (b)** இல் அளவுசார் அணுகுமுயையில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற 5 நுட்பங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது.

பரீட்சார்த்திகள் நடத்தைசார் அணுகுமுறையின் 5 விமர்சனங்களை இனங்கண்டு **பகுதி (a)** இற்குரிய முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆனால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு விடையளித்திருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே அளவுசார் அணுகுமுறை பற்றி விபரித்திருந்தனர். முகாமைத்துவ அணுகுமுறை பற்றிய அறிவின்மை ஆனது முகாமைத்துவச் சிந்தனைகள் மற்றும் முகாமைத்துவ வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றை அமைப்பதில் தாக்கம் செலுத்துவதை இவ்வாறு குறைந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தமைக்கான காரணங்களாகக் குறிப்பிடலாம்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 08**

இவ்வினா இரு (02) பகுதிகளைக் கொண்டதாகும். பகுதி **(a)** ஆனது அதிகாரம் மற்றும் பொறுப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை விபரிக்குமாறு கேட்டிருந்த அதே வேளை பகுதி **(b)** ஆனது விளைதிறன்மிக்க அதிகாரக் கையளிப்புக்கான 3 தடைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்த அதே நேரம் ஒரு சிலர் வினாவைச் சரியாக விளங்கிக் கொண்டிருக்கவில்லை. அதிகாரம் மற்றும் பொறுப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை விபரிப்பதற்குப் பதிலாக அவர்கள் அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை எழுதியிருந்தனர். அத்துடன் அதிகாரக் கையளிப்பிலுள்ள தடைகள் பற்றி எழுதுவதற்குப் பதிலாக அதன் பிரதிகூலங்கள் பற்றி எழுதியிருந்தனர். மேலும், பரிசீலிக்கப்பட்ட பாட விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்தாது பரீட்சார்த்திகள் தங்களுக்குத் தோன்றிய எந்தவொரு விடயத்தினையும் விடைகளாக எழுதியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 09**

இது நிறுவனமொன்றின் தந்திரோபாயம் பற்றி அமைக்கப்பட்டிருந்த வினாவாகும். இது 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** ஆனது நிறுவனத் தந்திரோபாயங்களின் பிரதான மட்டங்களை விபரிக்குமாறு கேட்டிருந்த அதே வேளை **பகுதி (b)** ஆனது நல்ல தந்திரோபாயம் ஒன்றின் 2 பண்பியல்புகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது முகாமைத்துவ மட்டங்கள் பற்றி எழுதியிருந்தனர். அத்துடன் பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிப்பதைத் தவிர்த்திருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு திருப்திகரமான விடைகளை அளித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் தந்திரோபாயத்தின் இரு பண்பியல்புகளைக் குறிப்பிட்டிருந்த போதிலும் அவர்கள் அதனை விபரித்திருக்கவில்லை. இதன் விளைவாக, அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## பகுதி D

**வினா இல. 10**

இது ஒரு விடய ஆய்வு வினாவாகும். இங்கு தரப்பட்ட விவரணத்திற்கு கோட்பாட்டு ரீதியான விடயங்களைப் பிரயோகிப்பதற்கான அறிவு பரிசீலிக்கப்பட்டது. இவ்வினா **பகுதிகள் (a), (b), (c), (d)** என 4 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**பகுதி (a)**

இங்கு **ஹொனி சுவீட்ஸ் கம்பனியின் திரு. எம். சில்வாவினது** தலைமைத்துவப் பாணியை மதிப்பிடுமாறு கோரப்பட்டது. சம்பந்தப்பட்ட விவரணத்தில் 2 தலைவர்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முகாமைப் பணிப்பாளராக இருந்த திரு. **சில்வாவின்** தலைமைத்துவப் பாணியை மதிப்பிடுவதற்கு விவரணத்திற்குப் பொருத்தமான சம்பந்தப்பட்ட விடயங்கள் பிரித்தெடுக்கப்பட்டு அடையாளங் காணப்படுதல் வேண்டும். பல்வேறு தலைமைத்துவப் பாணிகளைப் பின்பற்றுவது சாத்தியமற்றதாகும். தரப்பட்ட விவரணத்திற்குப் பொருத்தமான சம்பந்தப்பட்ட தலைமைத்துவப் பாணியை அடையாளம் கண்டுகொள்வதால் விவரணம் தொடர்பான விடயங்களைப் பிரித்தெடுப்பது பொருத்தமானதாக இருக்கும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை அளித்திருந்தனர். பரீட்சார்த்திகள் விவரணத்திலிருந்து விபரங்களைப் பிரித்தெடுத்திருந்த போதிலும் தலைமைத்துவப் பாணியை பெயர்குறிப்பிடாதிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**பகுதி (b)**

இந்தப் பகுதியில், முகாமையாளருக்கும் தலைவருக்குமிடையிலான 4 வேறுபாடுகளை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. இது நேரடி வினாவாக இருந்தபடியால் விடயங்களைக் கற்றிருந்த பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை எழுதியிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் முகாமையாளர் மற்றும் தலைவரைப் பற்றி சுருக்கமாகத் தந்திருந்தனர்.

**பகுதி (c)**

இந்தப் பகுதியில், பரீட்சார்த்திகள் விடய ஆய்வில் தரப்பட்ட கம்பனிக்கு ஊக்கப்படுத்தல் கோட்பாடொன்றான இரு காரணிக் கோட்பாட்டினை பிரயோகிப்பதற்குத் தேவைப்படுத்தப் பட்டிருந்தனர். இங்கு, விடயத்துடன் சம்பந்தப்பட்டதான இரண்டு ஊக்கப்படுத்தல் கோட்பாடுகளை விபரிப்பது அவசியமானதாக இருந்தது. இரண்டு ஊக்கப்படுத்தல் கோட்பாடுகளை விபரிப்பதற்கும் அதனை தரப்பட்ட விவரணத்திற்கு செய்முறை ரீதியில் பிரயோகிப்பதற்கும் என புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளித்திருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் அவர்களது விடைகளில் இரண்டு ஊக்கப்படுத்தல் கோட்பாடுகளைச் சமர்ப்பித்திருந்தனர் ஆயினும் அவை **ஹொனி சுவீட்ஸ் கம்பனியுடன்** தொடர்புடையதாக இருக்கவில்லை.

**பகுதி (d)**

இப்பகுதி வினாவானது **ஹொனி சுவீட்ஸ் கம்பனியில்** விளைதிறன்மிக்க நிறுவனக் கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு **திரு. எம். சில்வாவினால்** அறிமுகப்படுத்தக்கூடிய செயற்பாடுகள் 4 இனைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இங்கு விடையளிக்கும்போது நிறுவனக் கலாசாரம் என்பதால் கருதப்படுவது யாது என்பதை விளங்கிக் கொள்வது அவசியமாக இருந்தது. முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்வதற்கு, விளைதிறன்மிக்க நிறுவனக் கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு நிறுவனம் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுவது போதுமானதாக இருந்தது. விளைதிறன்மிக்க நிறுவனக் கலாசாரம் பற்றி எவ்வித புரிதலையும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் கொண்டிராத காரணத்தால் அவர்கள் இவ்வினாவுக்குச் சரியான விடையினை வழங்கியிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**- - -**

## <u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கருத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:

1. பாடத்திட்டத்தை நன்றாகக் கற்கவும்.

2. வினாப்பத்திரத்தைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். (இந்நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள கூடுதல் நேரத்தைப் பயன்படுத்தவும்)

3. பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசித்து, அதில் என்ன வினவப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடை எதிர்பார்க்கப்படும் வேளையில், தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

4. பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

5. விடைப் புத்தகத்தினை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கங்கள், உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

6. ''செயல் வினைச்சொல் பட்டியல்'' ஒன்று வினாப்பத்திரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் விடைகள் எழுதப்படல் வேண்டும்.

7. கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

8. சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பது விரும்பத்தக்கது.

9. உங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்வதன் பொருட்டு கடந்தகால வினாப்பத்திரங் களுக்கு விடையளித்துப் பழகிக்கொள்ளுங்கள்.

10. நல்ல முன்னாயத்தத்துடனும் சித்தியடைகின்ற உறுதியானதொரு உறுதிப்பாட்டுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -